பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 03 2026 MONDAY 6 30 PM

## வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில் மகளிர் சக்தி முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு 6 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

- முதலமைச்சரிடம் கோரிக்கை மனு அளிக்க வந்த விவசாயிகளை காவல்துறை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுக கூறியுள்ளது.

- தமிழகத்தில் குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச நீச்சல் போட்டியில் இந்தியாவின் Rishabh Das வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில் மகளிர் சக்தி முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் எழுதிய கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

மகளிர் மேம்பாடு என்ற நிலை மாறி, மகளிர் தலைமையிலான மேம்பாடு என்ற சூழல் தற்போது உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் மகளிர் பங்களிப்பு அதிகரித்து வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு, 6 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான தேர்தலில் 6 பேர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்ததால், இவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, திமுகவைச் சேர்ந்த திரு. திருச்சி சிவா, திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அதன் கூட்டணி கட்சிகளான தேமுதிகவின் திரு. எல். சுதிஷ், காங்கிரஸ் கட்சியின் திரு. கிறிஸ்டோஃபர் திலக், அஇஅதிமுகவின் திரு. தம்பிதுரை, அதன் கூட்டணிக் கட்சியான பாமகவின் டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் மாநிலங்களவைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

கோடை காலத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

குடிநீர் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

விளை நிலங்களை அரசு திட்டத்திற்காக கையகப்படுத்துவதை எதிர்த்து, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினிடம் கோரிக்கை மனு அளிக்கச் சென்றவர்களை, காவல்துறை கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது, மக்களிடம் மனு கேட்டு சென்ற மு.க.ஸ்டாலின், முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு, அவற்றை பெறக்கூட மனமில்லாமல் உள்ளது இரட்டை நிலைப்பாட்டை எடுத்துரைப்பதாக தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

விவசாயிகளின் கோரிக்கை மனுவினை, முதலமைச்சர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை, திரிசூலத்தில் 17 வயது சிறுவன் உட்பட இரண்டு பேர் இன்று கொலை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கொலை, கொள்ளை மற்றும் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக அரசுக்கு உரிய பதிலடி கொடுக்க மக்கள் தயாராகிவிட்டதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மக்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, அவை நடவடிக்கைகள் நாள் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

இன்று அவை கூடியதும், மேற்காசிய விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, அவை நடவடிக்கைகள் இரண்டு முறை ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் அவை கூடியபோதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் நான் முழுமைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையே, மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செயல்பட்ட விதம் கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இந்த செயல்பாடு பொறுப்பற்ற முறையில் உள்ளதாக குறை கூறினார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சிக்கு எதிர்க்கட்சிகள் தடையாக உள்ளது மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடாளுமன்றத்தில் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க அரசு தயாராக இருப்பதை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், இதனை ஏற்க மறுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடுவது, அவையின் மாண்பையும், கண்ணியத்தையும் குறைப்பதாக உள்ளது என்று கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இந்த செயல்பாடுகள், ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரானது என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

>>>>><<<<<

பழங்குடியினரின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி, பழங்குடியினரின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பழங்குடியினரின் உற்பத்தி பொருட்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

>>>>><<<<<

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், 12 கோடிக்கும் மேற்பட்ட ஊரக குடியிருப்புகள் பயனடைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. சோமண்ணா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வருவதற்கு முன், 3 கோடிக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மட்டுமே குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வசதியை பெற்றிருந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட சில கிராமப்பகுதிகளில் யானை நடமாட்டம் உள்ளதாக வனத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

யானை நடமாட்டம் தென்பட்டால், பொதுமக்கள் வனத்துறையினரிடம் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய் பைட் - தண்டபாணி 41 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த ஆறு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - துரை 28 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 2 மின்தூக்கிகளின் பயன்பாட்டை, மாநில அமைச்சர்கள் திரு. சேகர்பாபு மற்றும் திரு. கோவி செழியன் இன்று தொடங்கி வைத்தனர்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தல் பணிக்காக, தெலங்கானாவிலிருந்து மத்திய ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த 75 பேர் இன்று நாமக்கல் வந்து சேர்ந்தனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூலில் சிறப்பாக செயல்பட்பட மகளிர் முகவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வருவாய் அலுவலர் திரு. முருகேசன் இன்று வழங்கினார்.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே போதைப்பொருட்களை கடத்திய 5 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே மான் வேட்டையில் ஈடுபட்ட இருவரை வனத்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச நீச்சல் போட்டியில் இந்தியாவின் Rishabh Das வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 100 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக கோப்பைக்கான தகுதிச்சுற்று மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

உலக டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை மூன்றாவது முறையாக வென்ற இந்திய அணிக்கு மாநிலங்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

>>>>>end<<<<<